சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும்

(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B) (பாகம் - 28)

1993 மே தினத்தோடு முடிந்த கதை

மேலும் சனாதிபதி பிறேமதாச நாடு பூராகவும் ஆடைத் தொழிற்சாலைகளை ஆரம்பித்து இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்து ஆடைகளை ஐரோப்பா அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து அன்னிய செலாவணி வருவாயையும் பெற வழிசமைத்தார். அத்துடன் ஆடைத் தொழிற்சாலை அமைக்கப்படும் கிராமத்து முக்கிய சந்தியில் ஒரு மணிக்கூட்டு கோபுரமும் அமைக்கப்பட்டது. அண்மையில் பாதுகாப்பற்ற ரெயில்வே கடவையில் பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டும் அது சம்பந்தமாக பல எதிர்ப்பு நடவடிக்கைகள் ஆர்ப்பாட்டங்கள் நடந்தும் கூட பாராமுகமான அரசாக இன்று காணப்படுகின்றது. அன்று பிறேமதாசா காலத்தில் தென்னிலங்கையில் இதே போன்று பாதுகாப்பற்ற ரெயில்வே கடவை காரணமான மரணம் சம்பவித்ததை கேள்வியுற்றதுமே நாடு முழுவதிலுமுள்ள பாதுகாப்பற்ற சகல ரெயில்வே கடவைகளிலும் மூங்கில் தடி அல்லது காட்டு மரக்கொப்பு கொண்டு ரெயில் கடந்து செல்லும் நேரங்களில் வீதியை மூடிவிட பிறேமதாசா எடுத்த மனித நேய நடவடிக்கை போல் இன்று எவருக்கும் அவ்வாறான எண்ணம் வரவில்லை. இச்செய்கையால் ரெயில்வே கடவைகளுக்கு அண்மையில் வசித்த பலருக்கு அன்று சிறு ஊதியம் பெறும் வாய்ப்பும் கிட்டியது. பிரச்சினைகள் நிறைந்த காலகட்டத்தில் பிறேமதாசாவால் இவ்வாரெல்லாம் மக்கள் நலன் திட்டங்களை செய்து முடிக்க இயலுமாயிருந்தால் அவருக்கு பின் அக்கதிரையில் அமர்ந்தவர்களால் இப்போதும்கூட ஏன் அவர்போல் இயங்கமுடியவில்லை. காரணம் கட்சி அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அமைச்சர்ளினதும் அதிகாரிகளினதும் அசமந்தப்போக்கு தகைமையில்லாச் செல்வாக்குகளுக்கு அடிபணிதல் இலஞ்சம் ஊழலில் ஈடுபடல் ஆகியன அதிகாரத்தில் இருப்பவர்களை ஆட்டிப்படைத்து வந்துள்ளது வருகின்றது.

1993 மேதின ஊர்வலத்தில் பிறேமதாசா தலைமை தாங்கி ஆமர் வீதியில் பொலிஸ் நிலையம் அருகாமையில் வரும்போது தனது வெள்ளைக் கைக்குட்டையை மக்களை நோக்கி அசைத்து வந்ததையெல்லாம் நேரடி தொலைக்காட்சி மூலம் காண்பிக்கப்பட்டு வந்தது. பின் பாரிய வெடிச்சத்தம் கேட்ட கையோடு தொலைக்காட்சியின் நேரடி ஒளிபரப்பும் நிறுத்தப்பட்டுவிட்டது. அதன்பின் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரினால் சனாதிபதி கொல்லப்பட்டார் என்ற அறிவித்தல் வெளியாகியது. அப்போதைய காலகட்டத்தில் எந்த அரசியல்வாதியும் ஏதாவது சூழ்நிலையில் கொலை செய்யப்பட்டிருந்தாலும் அக்கொலைக் குற்றச்சாட்டை புலிகளின் மேல் சுமத்திவிடுவது என்பது சர்வசாதாரணம். இதே போன்றுதான் பிரேமதாசாவை எதிர்த்து கட்சிக்குள் நேரடியாக மோதிக்கொண்டிருந்த அமைச்சர்களான காமினி திஸ்ஸாநாயக்கா மற்றும் லலித் அத்துலத்முதலி ஆகியோர்களில் லலித் அத்துலத்முதலியும் இந்நிகழ்வுக்கு எட்டு தினங்களுக்கு முன் படுகொலை செய்யப்பட்டிருந்தார். அவரின் மரணமும் புலிகள் அமைப்பினால் செய்யப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. பிறேமதாசாவின் மரணத்தில் தங்களுக்கு தொடர்பில்லை என புலிகள் அமைப்பு கூறியிருந்தது. அதே சமயம் ஆமர் வீதியிலோ கொழும்பிலோ எங்கேயும் தமிழர் எவரும் தாக்கப்படவில்லை. தமிழர் கடைகள் வீடுகள் எரிக்கப்படவுமில்லை. சம்பவம் நடைபெற்ற ஆமர்வீதி சந்தியிலிருந்து பொலிஸ் நிலையபக்கம் ஈராக தண்ணீரால் உடனடியாக வீதி கழுவி சுத்தம்

செய்யப்பட்டது. இவையெல்லாம் இரு மரணங்களும் உட்கட்சி மோதல் விவகாரமாக இருக்கலாம் என்ற சந்தேகத்துக்கு வலுச்சேர்க்கின்றது. சிறிய கால இடைவெளியின் பின் காமினி திஸ்ஸாநாயக்காவும் வேறும் பன்னிரண்டு அமைச்சர்களும் உதவி அமைச்சர்களும் கிராண்ட்பாஸில் நடைபெற்ற சனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போது புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியினால் கொல்லப்பட்டார்கள். இத்தாக்குதல் புலி அமைப்பால் ஏற்றுக்கெள்ளப்பட்டது. 16.08.1994 அன்று நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சியே வெற்றியீட்டியது. சந்திரிக்கா பிரதமரானார். யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பு தேர்தலை புறக்கணிக்குமாறு கடுமையாக எச்சரிக்கை விடுத்ததால் மக்கள் வாக்களிக்க செல்லவில்லை. அதனைப் பயன்படுத்திய ஈ.பி.டி.பி. அரசபடைகளை தம்வசப்படுத்தி தமது தொண்டர்களை வாக்களிக்கப்பண்ணி யாழ்.மாவட்ட தொகுதிகளில் 05, 08, 12 என மிகக் குறைந்த வாக்குகளை பெற்று 09 பாராளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கிவிட்டனர்.சந்திரிக்கா அரசில் அமைச்சர்களாக உதவி அமைச்சர்களாக பதவி வகித்தார்கள். புலிகள் அமைப்பும் பிரபாகரனும் தற்போது இல்லை ஆனால் டக்லஸ் தேவானந்தா இன்றும் பாராளுமன்ற உறுப்பினராக வீற்றுள்ளார். அதன்பின் 09.11.1994 அன்று நடைபெற்ற சனாதிபதி தேர்தலில் சுதந்திர கட்சியில் சந்திரிக்காவும் ஐ.தே.க.யில் காமினி திஸ்ஸாநாயக்காவுமிடையே போட்டி ஆரம்பித்தாலும் இடையில் கிராட்ண்பாஸ் குண்டுத் தாக்குதலில் காமினி இறக்க அவரின் மனைவி சிறிமா திஸ்ஸாநாயக்கா ஐ.தே.க.வில் போட்டியிட்டு சந்திரிக்காவிடம் பலத்த தோல்வியைத் தழுவினார். அத் தேர்தலின்போது சந்திரிக்கா சமாதான தேவதையென பலராலும் வர்ணிக்கப்பட்டார். தாயார் சிறிமா பண்டாரநாக்கா பிரதமரானார்.

சந்திரிக்காவின் முயற்சி

சனாதிபதியானவுடன் சந்திரிக்கா சில அதிகாரிகளை நியமித்து அவர்களை புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தார். நான்கு பேர்கள் அடங்கிய குழுவில் சிரேஸ்ட சட்டத்தரணி கே.பி. பாலபெட்டபெந்தி, யாழ் அரசாங்க அதிபராக முன்பிருந்த லயனல் பெர்ணான்டோ, ராஜன் ஆசீர்வாதம், நவீன் குணரட்ன ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். அவர்கள் உலங்குவானூர்தியில் யாழ்ப்பாணம் வந்திறங்கியபோது யாழ். மக்கள் பலர் சமாதானம் மலரப்போகின்றது என எதிர்பார்த்து அந்த வானூர்தியை தொட்டு முத்தமிட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன. புலிகள் சார்பில் தமிழ்செல்வன் தலைமையில் கரிகாலன, இளம்பரிதி, ரவி, டொமினிக் ஆகியோர் பங்கேற்றார்கள். நான்கு சுற்றுப் பேச்சுவார்த்தையுடன் 1995 சித்திரையில் அம்முயற்சி கைவிடப்பட்டது. நீலன் திருச்செல்வத்தின் பங்களிப்புடன் அரசு உருவாக்கிய புது அரசியலமைப்பு வரைவை புலிகளுக்கு அச்சமயம் தெரிவிக்கவில்லை என்றும் அவ்வரைவு நேர்த்தியானது என அன்டன் பாலசிங்கம் பின்னொரு சமயம் ஊடகத்திற்கு தெரிவித்ததாகவும் ஒரு கருத்து நிலவுகின்றது. திருகோணமலையின் துறைமுகக் கடற்பரப்புக்குள் பாரிய குண்டொன்றை புலிகள் வெடிக்க வைத்ததன் காரணமாக பேச்சுத் தடைப்பட்டது. யுத்தம் பாரிய அளவில் மீண்டும் ஆரம்பமாகியது. 21.12.1999 சனாதிபதி தேர்தல் இடம்பெற்றது. சந்திரிக்கா ரணில் விக்கிரமசிங்கவுடன் போட்டியிட்ட சந்தர்ப்பத்தில் சந்திரிக்கா மீது புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியால் நடத்தப்பட்ட தாக்குதலில் மயிரிழையில் சந்திரிக்கா உயிர் தப்பினார். அவரின் ஒற்றைக்கண்ணில் காயமேற்பட்டிருந்தது. அத்தேர்தலில் ரணில் வெற்றிபெறக்கூடிய சந்தர்ப்பமிருந்தும் அனுதாப அலைகள் சந்திரிக்காவை வெல்லவைத்தது. (தொடரும்)